
JTM தமிழ்ப் பள்ளி
ஓதுவது ஒழியேல்


ஜாக்சன்வில் தமிழ் பள்ளியின் பருவ இதழ்

# மயிலிறகு

வாழ்க தமிழ்! வளர்க தமிழினம்!

மயில் 5 இறகு 1, 08-15-2023









## ஆகஸ்ட்-15- 76 வது
## சுதந்திர தினம் 2023

# பதிப்பாசிரியர் குழுவிடமிருந்து

**அனைவருக்கும் வணக்கம்,**

**சுதந்திர தின வாழ்த்துக்கள்**

**நமது பள்ளி 12ஆம் ஆண்டிற்குள்ளும், மயிலிறகு 5ஆம் ஆண்டிற்குள்ளும் அடியெடுத்துவைகிறது என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்**

**மயிலிறகு பத்திரிகையில் மாணவர்களுடன், பெற்றோர்களும் உங்களுடைய படைப்புகளை பதிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

**திருக்குறள், சுவையான சுட்டிக் கதைகள், சிறுவர் பாடல், தாத்தா பாட்டிக்குக் கடிதம், தமிழ்க் குறுக்கெழுத்து விளையாட்டு, சிறுவர்களின் ஓவியங்கள், பழமொழி, மரபு விளையாட்டு, நா பிறழ் பயிற்சி, சொல் விளையாட்டு, எழுத்து விளையாட்டு, விடுகதை, தமிழின் தொன்மை சார்ந்த பல தகவல்களை உள்ளடக்கிய இந்த இதழ் உங்கள் அனைவருக்கும் பிடிக்கும் என நம்புகிறோம்.**

**பதிப்பில் உள்ள சில தகவல்கள் மட்டுமே இணைய தளத்தில் எடுக்கப்பட்டவை, மற்ற அனைத்தும் முற்றிலும் சுயமாக உருவாக்கப்பட்டவை. அனைத்து தமிழ் சிறுவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கும் இவ்விதழ் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகின்றேன். எனவே இந்த இதழுக்கு சற்று நேரம் ஒதுக்கி, தாங்கள் தங்கள் குழந்தைகளுடன் படிக்கும் படி அன்பாக கேட்டுக் கொள்கிறோம்.**

**இதழை மேலும் சிறப்பிக்க உங்கள் உதவி மிகவும் அவசியம். உங்கள் கருத்துக்களையும், குறிப்புகளையும் மின்னஞ்சல் வழியாக தெரிவிக்கவும்.**
**மின்னஞ்சல் தொடர்பு:**
**kathiravanp@yahoo.com**

**Pradeekutty@yahoo.co.in**

**வெளியிட உதவி புரிந்த அனைவருக்கும் நன்றி!**

## உள்ளே.....

- சென்ற வருட நிலை 6 மாணவர்களின் சிறுகதை
- ஆசிரியர் பகுதி-
- சித்திரம் பேசுதடி
- கதை நேரம்
- வார்த்தை விளையாட்டு
- செய்திகள்

# தமிழ் பள்ளி
# மாணவர்களின் படைப்பு

குழந்தைகளை ஸ்பாட்டிலேயே கதை எழுதச் சொல்லப்பட்டது, ஒரு குழந்தை கதையைத் தொடங்கியது, மற்றவர்கள் அதைத் தொடர்ந்து முடித்துவிட்டார்கள்.

எந்த விவாதமும் இல்லாமல் கதையை எழுதினார்கள்.

ஒவ்வொரு குழந்தையும் 2 வரிகளை எழுதினார்கள்.

நிலை 6 மாணவர்கள் – 5 குழந்தைகள்.

சமிக்ஷா
ஸ்ருதிலயா
ஆஷ்ரிதா
பாவேஷ்
ஹர்ஷிதா

# தமிழ் பள்ளி
# மாணவர்களின் படைப்பு

ஒரு நாள் ஒரு ராஜா இருந்தார். அந்த ராஜா ஒரு பணக்காரர். அவருக்கு ஒரு நாய் இருந்தது. அந்த நாய் சிறிய நாய். ஒரு நாள், அந்த நாய் ஓடி போச்சு. அந்த ராஜாவுக்கு பயம் வந்தது. அந்த ராஜா அவருடைய நண்பனை கூப்பிட்டார். ராஜா அவருடைய நண்பனிடம் உதவி கேட்டார். அந்த நண்பன், சேந்தன் அழகன், காட்டுக்குள் போய், நாயை கண்டுபிடித்தார். சேந்தன் அழகனுடன் நாயும் விமானத்தில் அரண்மனைக்கு சென்றார்கள். அங்கே ராஜா மகிழ்ச்சியில் வரவேற்றார்.

– நிலை 6

# தமிழ் பள்ளி மாணவர்களின் படைப்பு

ஒரு நாள் ஒரு ராஜா இருந்தார். அந்த ராஜா ஒரு பணக்காரரர்.அவருக்கு ஒரு நாய் இருந்தது.அந்த நாய் சிறிய நாய். ஒரு நாள் அந்த நாய் ஓடி போச்சு அந்த ராஜாவுக்கு பயம் வந்தது.அந்த ராஜா அவருடைய நண்பனை கூப்பிட்டார். ராஜா அவருடைய நண்பனிடம் உதவி கேட்டார். அந்த நண்பன் சேந்தன் அமுதன் காட்டுக்குள் போய் நாயை கண்டுபிடித்தார். சேந்தன் அமுதனும், நாயும் விமானத்தில் அரண்மனைக்கு சென்றார்கள், அங்கே ராஜா மகிழ்ச்சியில் வரவேற்றார்

# ஆசிரியர் பகுதி

**நமது பள்ளியின் நிலை 8 ஆசிரியர் சுதாகர் அவர்களின் கவிதை பெட்னா 2023 இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்ற கவிதை நமக்காக:**

## புலம் பெயர் பறவைகள்

வானம் பாத்த பூமியில
வறண்டு போன கிராமத்துல
புள்ளைங்கள படிக்க வைக்க
புலம் பெயர்ந்தார் ஓர் அப்பா

ஊருவிட்டு ஊரு வந்து
உறவுகளை தான் மறந்து
உழைப்பை மட்டும் உறுதுணையா
ஊன்றிக்கொண்டு வழி நடந்தார்

தான் படிக்க வழியில்ல
துணை நிற்க ஆளில்லா
பட்ட கஷ்டம் போதுமடா –
புள்ளைங்கள
படிக்க வைக்க வேணுமடா

# புலம் பெயர் பறவைகள்

நரகமான நகரத்துல
நாதியென்று யாருமில்ல
பழைய சோறு தின்னாலும்
படிக்க வைக்க மறக்கவில்ல

படிச்சு மேல வந்தாச்சு
பழைய துணியும் பட்டாச்சு
பறக்க நேரம் வந்தாச்சு
பிள்ளைங்க பரதேசம் பறந்தாச்சு

நாள்தோறும் விசாரிப்பு
நாளடைவில் குறைஞ்சிருச்சு
காத்திருந்து காத்திருந்து
கண்கள் ரெண்டும் குளமாச்சு

மகனுக்காக நீ பெயர்ந்த
மகளுக்காக அவன் பெயர்ந்தான்
புலம் பெயர்ந்த யாவருமே
அவருக்காக வாழ்வதில்ல

– சுதாகர்


தமிழரின் பாரம்பரிய இசைக்கருவிகள் சில
தப்பட்டை
Thappaddai
முரசு
Murasu
பறை
Parai
கொம்பு
Kompu
மத்தளம்
Maththalam
நாதசுரம்
Nathasuram
வீணை
Veenai
தாளம்
Thalam
கிடுகிட்டி
Kidukiddy
தவில்
Thavil
கடம்
Kadam
யாழ்
Yarl
உருமி
Urumi
பம்பை
Pampai
மிருதங்கம்
Mirutangam
எக்காளம்
Ekalam
தப்பு
Thappu
உடுக்கை
Udukkai
கிலுகிலுப்பை
Kilukiluppai
நாமுழவு
Namulavu
புல்லாங்குழல்
Pullankulal
சங்கு
Sangu
குடமுழா
Kudamula
மகுடி
Mahudi

தொகுப்பு
வானதி

# சித்திரம் பேசுதடி..




ஷ்ரத்தா ஹரிஹரன்

ஷ்ரத்தா
ஹரிஹரன்




# கதை நேரம்

## திருக்குறள் கதைகள்

### காலத்தே பயிர் செய்

முன்னொரு காலத்தில் மலைச்சாமி என்ற ஏழை விவசாயி, இலந்தைக்குட்டை என்ற கிராமத்தில் வாழ்ந்து வந்தான். அவனுக்கென்று சொந்தநிலம் ஏதும் கிடையாது. ஆனால், விவசாயம்தான் சோறு போடும் என்பதை ஆணித்தரமாக நம்பினான். அதே ஊரில் வசித்துவரும் மாதையன் என்ற செல்வந்தனின் நிலத்தைக் குத்தகைக்குக் கேட்டான்





# காலத்தே பயிர் செய்

அச்செல்வந்தனும் சில நிபந்தனைகளுடன் தன் நிலத்தில் விவசாயம் செய்ய அனுமதிப்பதாகக் கூறினான். அதனை ஒப்புக்கொண்ட விவசாயி செல்வந்தனின் நிலத்தில் விவசாயம் செய்யத் தொடங்கினான். அச்செல்வந்தன் விவசாயியின் உழைப்பைச் சுரண்டுவதிலேயே குறிக்கோளாய் இருந்தான். இருந்தபோதிலும் மலைச்சாமி நேர்மையானவனாகவும், புத்திசாலியாகவும் இருந்ததால் செல்வந்தனிடம் ஏமாறவில்லை

ஒருமுறை செல்வந்தன் விவசாயிடம் குத்தகைக்கு ஈடாக "மண்ணுக்கு மேலே விளைபவை எனக்கு, மண்ணுக்குக் கீழே விளைபவை உனக்கு" என்று கட்டளையிட்டான். புத்திக்கூர்மையுடன் விவசாயி நிலக்கடலை பயிரிட்டதால் விவசாயிக்கே இலாபம் கிட்டியது. ஏமாற்றமடைந்த செல்வந்தன் அடுத்தமுறை விவசாயியை ஏமாற்ற எண்ணி நிபந்தனையை மாற்றினான்.





# காலத்தே பயிர் செய்

இம்முறை "மண்ணுக்குக் கீழே விளைபவை எனக்கு,மண்ணுக்கு மேலே விளைபவை உனக்கு" என்றான். ஆராய்ந்த விவசாயி இம்முறை நெல் பயிரிட்டான். இம்முறையும் விவசாயிக்கே இலாபம், ஏமாற்றத்துடன் வீடு திரும்பினான் செல்வந்தன். அதனால் எவ்விடத்து எதை, எப்படி, எக்காலத்தில் செய்ய வேண்டும் என்பதை அறிந்து செய்தால் உலகையே வென்று விடலாம்.

குறள்

"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்"

காலமறிதல், குறள் 484

விளக்கம்

செயலை முடிப்பதற்கு ஏற்ற காலத்தை அறிந்து இடத்தோடு பொருந்துமாறு செய்தால் உலகமே வேண்டும் எனக் கருதினாலும் அது கைகூடும்





# <u>விளையாடு வினையாக்கு!</u>

## கண்டுபிடி கண்டுபிடி

| | | | | |
|---|---|---|---|---|
| ஆ | ப் | மா | ன் | ல் |
| க | டு | டா | ச | லி |
| ம | ட் | ஈ | யா | பு |
| டு | ஆ | டை | னை | அ |
| உ | மா | நா | ய் | ணி |
| பூ | னை | ய | ண | ல் |

1. மாடு
2. ஆடு
3. பூனை
4. அணில்
5. நாய்
6. ஈசல்
7. மான்
8. புலி





**விடை களை**

kathiravanp@yahoo.com

Pradeekutty@yahoo.co.in

**என்ற**
**முகவரிக்கு மின்அஞ்சல் அனுப்பவும். சரியான விடை அளிப்பவருககு ஒரு ஆச்சரி யம் காத்துக் கொண்டிருக்கிறது**




# விளையாடு வினையாக்கு!

## குறுக்கெழுத்து போட்டி

Name: ______________________ Date: _______

# Tamil Crossword



**Across**

1. மாம்பழம்
4. நண்டு
10. தண்ணீர்
11. கல்
12. ஆணி
14. ஐந்து
15. பச்சை
18. ஓநாய்
20. இலை
21. உடம்பு
22. அம்மா
24. ஊசி

**Down**

2. மீன்
3. ஏணி
5. அப்பா
6. அணில்
7. மஞ்சள்
8. பட்டம்
9. பந்து
13. எறும்பு
16. ஆடு
17. ஒட்டகம்
19. ஈ
23. பத்து

**சென்ற இதழ் விடை**: 1. **கதவு**, 2. **வெண்டைக்காய்**, 3. **தேங்காய்**, 4. **நெருப்பு**, 5. **செருப்பு**, 6. **எலுமிச்சை**

https://jtmtamilschool.org/

# செய்திகள்

- தமிழ் பள்ளி அட்டவணை, நிகழ்வுகள் அனைத்தும் பள்ளி வலைதளத்தில் காணலாம்.
- தமிழ் தேனீ, ஒரு குறள் ஒரு டாலர், பெட்னா போட்டிகள் பற்றிய அறிவிப்புக்கள் விரைவில் வரும்.
- மயிலிறகு இதழ் 3 மாதத்திற்கு ஒரு முறை வரும்
- அடுத்த இதழில் சந்திப்போம்
- தன்னார்வலர்கள் தமிழ் பள்ளிக்கு வரவேற்கப் படுகிறார்கள்.
- நமது தமிழ் பள்ளி இணையதளம்; https://jtmtamilschool.org/

டிசம்பர் மடலில் சந்திப்போம்